



# திராவிட மாடல் அரசு

# நெய்தல் வளம் காக்கும் நீலப் படை!

## 60

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி....**

இன்று உலக அளவில் ஆள் கடத்தல், ஆயுதக் கடத்தல், போதைப் பொருள் கடத்தல் ஆகியவற்றுக்குப் பிறகு, நான்காவது பெரிய கள்ளச் சந்தை வர்த்தகமாக வன உயிரினக் கடத்தல் உருவெடுத்துள்ளது.

மரபு மருத்துவம், உணவு, நவீன ரக ஆடை அணிகலன்கள், வீட்டு அலங்காரப் பொருட்கள், செல்லப் பிராணிகளாக வளர்த்தல் உள்ளிட்ட காரணங்களுக்காக உயிருடனோ அல்லது உயிரற்றோ வன உயிரினங்கள் ஒரு நாட்டில் இருந்து இன்னொரு நாட்டுக்குக் கடத்தப்படுகின்றன. இப்படி ஒவ்வொரு நாளும் உலகின் பல்வேறு பகுதிகளில் வன உயிர் கடத்தல் வர்த்தகம் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது.

கோடி கோடியாக பணம் புரளும் இந்த வர்த்தகத்தால், உலகம் முழுவதும் உள்ள அரிய வன உயிரினங்கள் வேட்டையாடப்பட்டு, அதன் காரணமாக இயற்கை உருவாக்கிய உணவுச் சங்கிலி அறுபட்டு, சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டு வருகிறது.

வன உயிரினங்கள் என்றால் காடுகளில் உள்ள காட்டுயிர்கள் மட்டுமல்ல, கடலில் உள்ள விலங்குகள், தாவரங்கள் ஆகியவையும்தான். ஆனால், காடுகளில் உள்ள உயிரினங்களுக்குக் கிடைக்கும் முக்கியத்துவத்தில் பாதியளவு கூட, கடல்சார் உயிரினங்களுக்குக் கிடைப்பதில்லை. எனவே, அந்த உயிரினங்கள் கடத்தப்பட்டாலோ அல்லது வேட்டையாடப்பட்டாலோ பெரிய அளவில் மக்கள் கண்டுகொள்வதில்லை. கடல்சார் சூழலியலுக்கு அவை எவ்வளவு தூரம் உதவுகின்றன என்ற புரிதல் மக்களிடையே இல்லாததால், கடல்சார் உயிரினங்களின் முக்கியத்துவம் அவர்களுக்குத் தெரிவதில்லை.

இந்நிலையில், கடல்சார் உயிரினங்களைப் பாதுகாக்கவும், அவை கடத்தப்படுதல், வேட்டையாடப்படுதல் ஆகியவற்றைத் தடுக்கவும், இவை குறித்த விழிப்புணர்வை மக்களிடம், குறிப்பாக, கடலோரப் பகுதிகளில் வசிக்கும் மக்களிடம் உருவாக்கவும், நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான ‘திராவிட மாடல் அரசு’ உருவாக்கியுள்ளதுதான் **‘கடல்சார் உயர் இலக்குப் படை’** (மரைன் எலைட் ஃபோர்ஸ்).

### இந்தியாவின் முதல் நீலப் படை

கடல்சார் வணிகத்தின் மூலம் மேற்கு உலகத்தை, கீழைத்தேய நாடுகளுடன் இணைப்பதற்கு உருவான **‘ஸ்பைஸ் ரூட்’, ‘சில்க் ரூட்’** ஆகியவற்றுக்கு இந்தியா மிக முக்கியமான மையமாக இருந்தது போல, வன உயிரின கடத்தல் வர்த்தகத்துக்கும் இந்தியா மிக முக்கியமான புள்ளியாக இருக்கிறது.

இதில் கடல்சார் உயிரினங்கள் கடத்தலுக்கு, தமிழ்நாடும் பல ஆண்டுகளாக ஒரு மையமாக இருந்து வந்தது. ஏனென்றால், இங்குதான் மன்னார் வளைகுடா எனும் ‘உயிர்க்கோளக் காப்பகம்’ (பயோஸ்பியர் ரிசர்வ்) இருக்கிறது. உலகில் வேறு எங்கும் காண இயலாத அரிய உயிரினங்கள் இருக்கும் பகுதிகளை, அங்குள்ள உள்ளூர் மக்களின் பங்களிப்புடன் பாதுகாக்க ஐக்கிய நாடுகள் அவையின் ஒரு பிரிவான யுனெஸ்கோ எனும் சர்வதேச அமைப்பு உருவாக்கியவைதான் இந்த உயிர்க்கோளக் காப்பகங்கள்.

இந்தியாவில் இன்று 18 உயிர்க்கோளக் காப்பகங்கள் உள்ளன. அதில் தமிழ்நாட்டில் மட்டும்தான் அதிக அளவில் உயிர்க்கோளக் காப்பகங்கள் உள்ளன. இங்கே நீலகிரி, அகஸ்திய மலை மற்றும் மன்னார் வளைகுடா எனும் மூன்று உயிர்க்கோளக் காப்பகங்கள் உள்ளன.



இப்படி வரமாக நமக்கு அமைந்த சூழலியல், கடல்சார் உயிரினக் கடத்தலால் நமக்கு சாபமாகவும் மாறுகிறது. மன்னார் வளைகுடா மற்றும் பாக் ஜலசந்தி பகுதியில் இருந்து கடல் வளங்கள் கடத்தப்படுவதையும் வேட்டையாடப்படுவதையும் தடுக்க, நம் திராவிட மாடல் அரசு உருவாக்கியிருக்கும் இந்தப் படை, இந்தியாவிலேயே கடல்சார் உயிரினங்களைப் பாதுகாக்க ஏற்படுத்தப்பட்ட முதல் நீலப் படை (BLUE CADRE) ஆகும்.

### முன்னணியில் மீனவ சமூகம்

இந்த நீலப் படை, தமிழ்நாட்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் தொடங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு 2022 பட்ஜெட் கூட்டத்தொடரின் போது, கடல்சார் உயர் இலக்குப் படை அமைப்பதற்கான அறிவிப்பை வெளியிட்டது. இந்த அறிவிப்பின் தொடர்ச்சியாக, கடல்சார் உயர் இலக்குப் படையை அமைக்க, ரூ.109.65 லட்சம் ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிடப்பட்டது. குறிப்பாக மன்னார் வளைகுடா மற்றும் பாக் ஜலசந்தியில் கடல்சார் வன உயிரினக் குற்றங்களான கடல்வாழ் உயிரினங்களைக் கடத்துதல் மற்றும் வேட்டையாடுதலைத் தடுக்கும் பொருட்டு இரண்டு அலகுகள் கொண்ட படை அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடல்சார் உயர் இலக்குப் படையில் கடல் மைந்தர்களான, உள்ளூர் மீனவர் சமூகத்தைச் சேர்ந்த 12 கடல்சார் காவலர்களாக ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கு ஆழ்கடல் நீச்சல் பயிற்சி, ஸ்நோர்கெல்லிங் உள்ளிட்ட கடல் ரோந்து தொடர்பான விரிவான பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. அந்தப் பயிற்சிகளை இந்திய கடலோரக் காவல்படை, கடற்படை மற்றும் கடலோரக் காவல் ஆகிய சிறப்புப் படைகள் வாயிலாக வழங்கப்பட்டுள்ளன. மேலும் இந்தப் படைக்கு இரண்டு அதிநவீன ரோந்துப் படகுகள், கம்பியில்லா தகவல் தொடர்பு அமைப்புடன் பொருத்தப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

கடல்சார் உயர் இலக்குப் படை 1-இல் ஒரு வனச்சரக அலுவலர், ஒரு வனவர் மற்றும் 6 கடல்சார் காவலர்களுடன் மன்னார் வளைகுடா பகுதியிலும், கடல்சார் உயர் இலக்குப் படை 2-இல் ஒரு வனச்சரக அலுவலர், ஒரு வனவர் மற்றும் 6 கடல்சார் காவலர்களுடன் பாக் வளைகுடா பகுதியிலும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகிறார்கள்.

திராவிட மாடல் அரசு மேற்கொண்டு வரும் நலத் திட்டங்களால் பயன்பெற்று, நிலத்தில் உள்ளோர் வாழ்த்துகிறார்கள்... இனி நீலக்கடலுக்குள் இருக்கும் உயிரினங்களும் வாழ்த்தும், தாங்கள் பாதுகாக்கப்படுவதற்காக..!

**...சாதனை தொடரும்**

## கடலில் பலப்படுத்தப்படும் பாதுகாப்பு!

கடல் அட்டை, கடல் குதிரை, பவளப் பாறைகள், கடல் பல்லி, சுறாத் துடுப்புகள், அரிய வகையான சங்குகள் மற்றும் அழிந்து வரும் சில கடல்வாழ் உயிரினங்கள் ஆகியவற்றுக்கு, சர்வதேசச் சந்தையில் பெரும் தேவை உள்ளது. இந்த இனங்கள் அனைத்தும் மருத்துவத் தேவைக்காகவும், உணவுத் தேவைக்காவும், வேட்டையாடப்பட்டுக் கடத்தப்படுகின்றன. நட்சத்திர ஆமைகள் மற்றும் வண்ண மீன்கள் வசதியானவர்களின் வீடுகளில் செல்லப் பிராணிகளாக வளர்க்கப்படுவதற்காகக் கடத்தப்படுகின்றன. மன்னார் வளைகுடாவின் முழுக்கடல் சூழலியலிலும், இத்தகைய அழிவின் விளிம்பில் உள்ள கடல்வாழ் உயிரினங்கள், ஆரோக்கியமான நிலையில்தான் இருக்கின்றன.

மன்னார் வளைகுடா உயிர்க்கோளக் காப்பகத்தில் ஏராளமான இயற்கை வளங்கள் இருப்பதால், கடல் உயிரினங்கள் தொடர்பான சட்டவிரோத வர்த்தகம் தமிழ்நாட்டில் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதனால் கடல் பசு போன்ற அரிய கடல் பாலூட்டியினங்களைப் பாதுகாப்பது அவசியமாகும். கடல்சார் உயர் இலக்குப் படையினைப் பலப்படுத்துவதற்காக 2022-2023-ஆம் நிதியாண்டில் கடல்சார் நவீன கருவிகள், ஆழ்கடல் நீச்சலுக்குத் தேவையான உபகரணங்கள், நவீன புகைப்படக் கருவிகள், தொலைநோக்கிகள் மற்றும் ஜி.பி.எஸ் உபகரணங்கள், தகவல் தொடர்புக்கான டிஜிட்டல் கையடக்க டிரான்ஸ்லீவர்கள், இரவு நேர ரோந்துப் பணி மேற்கொள்ளுதல் மற்றும் கூடாரம் அமைத்துத் தங்குவதற்கான (முகாம்) பொருட்கள், டார்ச் லைட், சீருடைகள், உரு மறைப்புச் சீருடைகள், கனமழையிலிருந்து தற்காத்துக் கொள்வதற்கான அங்கிகள், கடற்கரையோரங்களில் நடந்து செல்ல ஏதுவாகக் காலணிகள், முதுகுப் பைகள் ஆகியவை வாங்கப்பட்டு கடல்சார் உயர் இலக்குப் படையில் பயன்படுத்தப்பட்டு, மன்னார் வளைகுடா கடல்வளப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் மாதம் முதலே இந்த நீலப் படை, பல்வேறு முன்னோட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தது என்றாலும், இந்த ஆண்டு மார்ச் 8 அன்றுதான் முறையாகத் தொடங்கி வைக்கப்பட்டது. முன்னோட்ட நடவடிக்கை காலம் தொட்டு, இப்போது வரை இந்த நீலப் படையின் பங்களிப்பாக வன உயிரினக் கடத்தல் மற்றும் வேட்டையாடுதல் தொடர்பாக 25 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. சுமார் 3,350 கிலோ எடையுள்ள தடை செய்யப்பட்ட கடல்வாழ் உயிரினங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அவற்றில் பதப்படுத்தப்பட்ட நிலையிலிருந்து 1.7 டன் அளவிலான கடத்தல் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

## தகவலிலும் பொய்யா..?

தேர்தல் பத்திரம் தொடர்பான விவரங்களை உச்ச நீதிமன்றத்திடம் சமர்ப்பிப்பதற்கு, ‘இந்தா அந்தா’ என்று இழுத்தடித்து, கடைசியில் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி கடுமை காட்டிய பிறகே, வழிக்கு வந்து தகவல்களை வெளியிட்டது பாரத ஸ்டேட் பாங்கு.

அந்த விவரங்கள் வெளியான பிறகு, பாரதிய ஜனதா கட்சியும், அதன் ஆதரவாளர்களும் என்னென்னவோ குட்டிக் கரணங்கள் அடித்து, தங்கள் நேர்மையை நிரூபிக்கப் பார்க்கிறார்கள். இதற்கிடையே, இப்போது புதிய பூதம் ஒன்று கிளம்பி இருக்கிறது.

மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த அஜய் போஸ் என்ற தகவல் பெறும் உரிமைச் சட்ட ஆர்வலர், இந்த ஆண்டு பிப்ரவரி 15 அன்று ஆர்.டி.ஐ. சட்டத்தின் கீழ் எஸ்.பி.ஐ. வங்கியிடம் தேர்தல் பத்திரம் தொடர்பாகக் கோரிய தகவலில், தேர்தல் பத்திரம் விற்பனை செய்யப்பட்ட நாள் முதல் 2024 ஜனவரி 25 வரை நாடு முழுவதும் மொத்தம், 28,030 பத்திரங்கள் விற்கப்பட்டுள்ளதாக அந்த வங்கி தகவல் தெரிவித்திருந்தது. ஆனால், வங்கி இப்போது வெளியிட்டிருக்கும் தகவலில் 18,871 பத்திரங்கள் மட்டுமே விற்பனை செய்யப்பட்டிருப்பதாகக் கூறியுள்ளது. எனில், மீதம் உள்ள சுமார் 10 ஆயிரம் பத்திரங்கள் எங்கே போயின என்ற கேள்வி எழுந்துள்ளது.

ஆனால், இதைப்பற்றியெல்லாம் ‘கோடி மீடியா’ வாய் திறக்கவே இல்லை. ‘தகவல் தந்ததே தாமதம். அப்படித் தந்த தகவலிலும் தகிடுதத்தமா?’ என்று மக்கள் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

## ஃப்ளாஷ்பேக்



த.கணேஷ்



### மாலையிட்ட மேற்பார்வையாளர்!

2001-ஆம் ஆண்டு மதுரையில் செல்லூர் பாலம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. பண்பாளர் பழனிவேல் ராஜன் அய்யா அவர்களும் இந்த நிகழ்வில் பங்கேற்றார். என் தந்தை பெ.தங்கராஜ் அவர்கள் 1963-ஆம் ஆண்டு முதலே கழகப் பற்றுக் கொண்டு பணியாற்றி வந்தவர். மதுரை மேயராக இருந்த குழந்தைவேலு அவர்களின் அரசு உதவியாளராகப் பணியாற்றி வந்த என் தந்தை, இந்தப் பாலம் கட்டமைக்கும் பணிகளை மேற்பார்வையிட்டவர் என்ற முறையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு மாலை அணிவித்து சிறப்பு செய்த போது இந்தப் படம் எடுக்கப்பட்டது.

**–த.கணேஷ் கண்ணன், கண்ணானேந்தல், மதுரை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### சிறைக்குத் தந்தி!

1962-ஆம் ஆண்டு விலைவாசி உயர்வுப் போராட்டத்தில் கலந்துகொண்டு பேரறிஞர் அண்ணா கைதானார். வேலூர் சிறையில் அடைக்கப்பட்டிருந்த அவருக்கு, ‘நாடாளுன்றக் கட்சிகளின் தலைவர்களை சந்திக்க, பிரதமர் அழைக்கிறார்’ என டெல்லியில் இருந்து காஞ்சிபுரம் முகவரிக்கு தந்தி வந்தது. அந்த தந்தி வேலூர் ஆட்சியர் மூலம் சிறைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. ‘நான் சிறையில் வைக்கப்பட்டிருப்பதால் வர இயலாமைக்கு வருந்துகிறேன்’ என, பிரதமர் நேருவுக்கு அண்ணா பதில் தந்தி அனுப்பி வைத்தார்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

421

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131